சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 09.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். NC 831/E/2022 (SA 1555/E/2022)**

திரு.பெ.கண்ணன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம்
.

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தின் 07.03.2022 மற்றும் 11.07.2025 தேதியிட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.பாலமுருகன், வட்டத் துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம் அவர்கள் இவ்வாணையத்தில் 04.03.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 11.07.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தொடர்பான ஆவணங்களை 18.082025 அன்று பார்வையிட, பொதுத் தகவல் அலுவலரின் 01.08.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும், மீண்டும் 25.09.2025 அன்று பார்வையிட, பொதுத் தகவல் அலுவலரின் 19.09.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும், மனுதாரர் அழைக்கப்பட்டுள்ளார். ஆனால் மனுதாரர் ஆவணங்களை பார்வையிட பொது அதிகார அமைப்பில் ஆஜராகவில்லை எனவும், எனவே, மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான அவணம் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் இல்லை என்பதற்கான பிரமாண பத்திரமானது, பொதுத் தகவல் அலுவலர்/ வட்டத்துணை ஆய்வாளர், மதுரை வடக்கு வட்டம் அவர்களின் 30.09.2025 தேதயிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொள்ள மனுதாரருக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டும், மனுதாரர் அதனை பயன்படுத்த தவறியுள்ளார் என ஆணையத்தால் கருதப்பட்டு, 30.09.2025 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 831/E/2022 (SA 1555/E/2022)</u>**
**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**
திரு.பெ.கண்ணன், த/பெ.ச.பெரியாண்டி மூப்பனார்,
2, முத்து இல்லம், ஆலாத்தூர், திருமலாபுரம் (அஞ்சல்),
மதுரை - 625 014.

Copy to: File MP/PA,